# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
# Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush, NSW 2140**

www.tsch.org.au
info@tsch.org.au


**பேச்சுப்போட்டி 2022** **ஆண்டு மூன்று (விசேட வகுப்பு)**

அனைவருக்கும் வணக்கம்

## ஒழுக்கம்

நல்ல ஒழுக்கம் என்பது பெற்றோர் சொற்கேட்டு நடத்தல், ஆசிரியர் சொற்கேட்டுப் படித்தல், மூத்தோரை மதித்தல், எல்லோருடனும் இனிமையாகப் பேசுதல் போன்றன ஆகும்.

இவற்றைப் பேணி நடந்தால் நாம் தவறான பாதையில் செல்ல மாட்டோம். ஒருவர் எவ்வளவுதான் படித்திருந்தாலும், எவ்வளவு செல்வத்தைப் பெற்றிருந்தாலும் ஒழுக்கம் வேண்டும்.

இல்லாவிட்டால் அவரால் மதிப்புடன் தலை நிமிர்ந்து வாழமுடியாது. எனவே மாணவர்களாகிய நாங்கள் இச்சிறு வயதிலிருந்தே ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து வாழப் பழகிக் கொள்வோம்.

நன்றி
வணக்கம்